# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2113/67 - 2019 මාර්තු මස 08 වැනි සිකුරාදා - 2019.03.08

*2113/67 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 (1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1) (அ) ஆகிய உறுப்புரைகளின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2019, மாச்சு மாதம் 07 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2019, மாச்சு 06.


1A - G 29614 — 382 (2019/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் இல. (1) "பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் 21 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

22. வளர்ந்துவரும் போட்டிகரமான வர்த்தகச் சந்தையினுள், பொது நன்மையைப் பாதுகாத்துக் கொண்டு சவால்களுக்குப் பதிலளிப்பதன் மூலம் தொலைத்தொடர்புத் தொழிலில் நீடுறுதியான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகத் தொலைத்தொடர்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் ;

(ஆ) அதன் நிரல் I இல் 21 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(இ) அதன் நிரல் II இல் 21 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

22. இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு.

(ஈ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம்" என்பதற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

- (1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டம்.

(2) அவ்வறிவித்தலில் இல. (6) "நிதி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இல் 40 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

41. வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதனோடிணைந்த கம்பனிகளும்.

(3) அவ்வறிவித்தலில் இல. (20) "வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் II இல் 26 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

27. மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி-சினிமா பூங்கா (ரன்மிஹிதென்ன).

(4) அவ்வறிவித்தலில் இல. (28) "தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் 2 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைவருக்கும் தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) அதன் நிரல் I இல் 3 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(இ) அதன் நிரல் II இல் 1 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

2. ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பனியும் அதன் துணைக் கம்பனிகளும் இணை நிறுவனங்களும்.

(ஈ) அதன் நிரல் II இல் 2 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(உ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டு நடவடிக்கைகளின் போது ஊக்கமருந்துப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம்" என்பதற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்-

- (1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டம்.

03-1169

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.